**INTERNATIONAL INDIAN SCHOOL,**
**DAMMAM MIDDLE SECTIONS (BMS/GMS)**
**ANNUAL EXAM - WORKSHEET 2024-25**

**CLASS: 6** **SUBJECT: TAMIL**

## உரைப்பகுதியை படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

சிறு தானிய உணவுகளே நம் உடல் நலத்திற்கு ஏற்றவை. குதிரை வாலி அரிசி, தினை, வரகரிசி, கேழ்வரகு, கம்பு, சோளம், பனிவரகு அரிசி, மாப்பிள்ளை சம்பா அரிசி, போன்றவை சிறு தானியங்கள் ஆகும். இந்தச் சிறு தானியங்களைக் கொண்டு பல உணவு வகைகளை மண் பானைகளில் சமைத்துப் பயன்படுத்துவது மிகவும் நல்லது. நாம் உண்ட உணவு முழுமையாகச் செரித்தபிறகுதான் அடுத்த வேளை உணவை உண்ண வேண்டும். இதைத் தான் நம் முன்னோர் “பசித்துப் புசி” என்றனர். இவற்றை தவிர்த்துவிட்டுத் துரித உணவுகளைச் சாப்பிடத் தொடங்கியதே பல்வேறு நோய்கள் ஏற்படக் காரணமாகிறது. சிறு தானிய உணவுகளை உண்போம். !வளமான வாழ்வைப் பெறுவோம்.

1. **எவ்வகை உணவு முறை நமக்கு ஏற்புடையது?**
2. **சிறு தானியங்களுள் எவையேனும் நான்கு எழுதுக.**
3. **துரித உணவு வகைகளை உண்ணக் கூடாது, ஏன்?**
4. **நம் முன்னோர்** சொன்னது என்ன ?
5. எதில் சிறு தானிய உணவு வகைகளை சமைத்துப் பயன்படுத்துவது நல்லது?

## வாக்கியங்கள்

**அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க.**

1) கண்ணன் குழல் ஊதினான் (வினா வாக்கியமாக மாற்று)

2) திருவண்ணாமலை மிகவும் அழகானது (உணர்ச்சி வாக்கியமாக மாற்றுக)

3) சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்? (செய்தி வாக்கியமாக மாற்றுக)

4) என்னே நீலகிரி மலையின் அழகு! (செய்தி வாக்கியமாக மாற்றுக

5) சார்லஸ் பாப்பேஜ் கணிப்பொறியைக் கண்டறிந்தார் (வினா வாக்கியமாக)

6) வான வில்லில் ஏழு நிறங்கள் உள்ளன (வினா வாக்கியமாக மாற்றுக)

7) பாம்பினைக் கண்ட அருண் அலறினான் (உணர்ச்சி வாக்கியமாக மாற்று)

8) பள்ளிக்குச் செல்லுமாறு அம்மா கூறினார் (கட்டளை வாக்கியமாக மாற்றுக

9) உணவு உண் (எவ்வகை வாக்கியம் எனக் கூறுக)

1) கிழக்கே சூரியன் உதிக்கிறது (எவ்வகை வாக்கியம் எனக் கூறுக)

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1) கருத்து வகை வாக்கியங்கள் ------------------------------------------------- வகைப்படும்.

2) கனிமொழி பாடம் படித்தாள் - இத்தொடரில் கனிமொழி என்பது -----------------

3) முற்றுபெற்ற கருத்தைத் தெரிவிக்கும் சொல் தொடர் ----------------- எனப்படும்.

4) கேள்வியால் வருவது ---------------------------------------------------------------- வாக்கியம்.

5) ஔவை ஆத்திச்சூடியை இயற்றினார் - என்பது ------------------------ வாக்கியம்.

பொருத்தமான இலக்கணக் குறிப்பினைத் தேர்ந்தெடு.

1) திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது.
அ) செய்தி வாக்கியம் ஆ) கட்டளை வாக்கியம்
இ) வினா வாக்கியம் ஈ) உணர்ச்சி வாக்கியம்

2) இராமனின் மனைவி யார்,
அ) செய்தி வாக்கியம் ஆ) கட்டளை வாக்கியம்
இ) வினா வாக்கியம் ஈ) உணர்ச்சி வாக்கியம்

3) ஐயகோ! மலை சாய்ந்ததா!
அ) செய்தி வாக்கியம் ஆ) கட்டளை வாக்கியம்
இ) வினா வாக்கியம் ஈ) உணர்ச்சி வாக்கியம்

4) காலையில் எழு !
அ) செய்தி வாக்கியம் ஆ) கட்டளை வாக்கியம்
இ) வினா வாக்கியம் ஈ) உணர்ச்சி வாக்கியம்

5) திருக்குறளைப் படி!
அ) செய்தி வாக்கியம் ஆ) கட்டளை வாக்கியம்
இ) வினா வாக்கியம் ஈ) உணர்ச்சி வாக்கியம்

## செய்வினை. செயப்பாட்டுவினை

1) பாட்டி வடை சுட்டாள் (செயப்பாட்டு வினையாக மாற்றுக)

2) காவலர் திருடனைப் பிழத்தனர் (செயப்பாட்டு வினையாக மாற்றுக)

3) பூனை பாலைக் குடித்தது (செயப்பாட்டு வினையாக மாற்றுக)

4) திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது (செய்வினையாக மாற்றுக)

5) பானை குயவனால் வனையப்பட்டது. (செய்வினையாக மாற்றுக)

6) முட்டை கோழியால் இடப்பட்டது (செய்வினையாக மாற்றுக)

## காலம்

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1) காலம் -------------------------------------------------------------------------------- வகைப்படும்.

2) நடக்கப்போகும் நிகழ்ச்சியைக் குறிப்பது ------------------------------ எனப்படும்.

3) உணவு உண்கிறான் - என்பது ----------------------------காலத்தைக் குறிக்கும்.

4) வருங்காலம் ----------------------------------------------------- என்றும் அழைக்கப்படும்.

கூறியவாறு செய்க

1) கல்வி கற்றாள் (வினைச்சொல்லை எடுத்து எழுதுக )

2) குமரன் படிப்பான் (நிகழ்காலம் ஆக்குக )

3) கோதை எழுந்தாள் (எதிர்காலம் ஆக்குக )

4) குரங்குகள் தாவுகின்றன (இறந்த காலம் ஆக்குக )

5) ஆசிரியர் கற்பிக்கிறார் (இறந்த காலம் ஆக்குக )

பொருத்தமான இலக்கணக் குறிப்பினைத் தெர்ந்தெடு.

1) திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்
அ) நிகழ்காலம் ஆ) இறந்த காலம் இ) வருங்காலம்

2) பாரி முல்லைக்குத் தேரைக் கொடுத்தான்
அ) நிகழ்காலம் ஆ) இறந்த காலம் இ) வருங்காலம்

3) தாத்தா மரம் நடுவார்
அ) நிகழ்காலம் ஆ) இறந்த காலம் இ) வருங்காலம்

4) ஆடினான்
அ) நிகழ்காலம் ஆ) இறந்த காலம் இ) வருங்காலம்

5) அரைப்பான்
அ) நிகழ்காலம் ஆ) இறந்த காலம் இ) வருங்காலம்

6) நீந்தினான்
அ) நிகழ்காலம் ஆ) இறந்த காலம் இ) வருங்காலம்

7) வீழ்வான்
அ) நிகழ்காலம் ஆ) இறந்த காலம் இ) வருங்காலம்

## சொல்

<u>கோடிட்ட இடத்தை நிரப்புக.</u>

1) எழுத்து தனித்து நின்றோ, ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து நின்றோ

------------------------------------------------------------------------------------------------அது சொல் எனப்படும்.

2) தை - என்பது ------------------------------------------------------------

3) சொல் ---------------------------------------------------------------------------------------- வகைப்படும்.

4) பெயர்ச்சொல் என்பது ------------------------------------------------------------------------------------

5) ஒருவன் செய்த செயலை அல்லது வினையைக் குறிக்கும் சொல் ---------------------

6) பெயரையும், வினையையும் இடமாகக் கொண்டு வரும் சொல் -----------------------------

7) பெயரையும், வினையையும் சார்ந்து அவற்றின் ------------------- உரிச்சொல் எனப்படும்.

8) சால, நனி - என்பதன் பொருள் ------------------------------------------------------------------------------

9) உறு, மா - என்பதன் டிபாருள் --------------------------------------------------------------------------------

10) ஐ, கு, ஆல் - என்பன ------------------------------------------------------------------------- ஆகும்.

11) உரிச்சொற்கள் ---------------------------------------------------------------------------------- உரியவை.

அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க.

1) கடற்கரைக்குச் சென்றான் (பெயர்ச்சொல்லை எடுத்து எழுதுக)

2) மாலா பாடினாள் (வினைச்சொல்லை எடுத்து எழுதுக)

3) ஆலயம் தொழுவது சாலவும் நன்று (உரிச்சொல்லின் பொருள் எழுதுக)

4) கோலம் (எத்தனை எழுத்துச் சொல்,)

5) கோலம் (எவ்வகைச் சொல்)

6) கயல்விழி மகிழ்ந்தாள் (சொற்களை வகைப்படுத்துக)

7) நகர் (தகுந்த உரிச்சொல் சேர்த்து எழுதுக)

8) புகழ்ந்தான் (தகுந்த உரிச்சொல் சேர்த்து எழுதுக)

9) நனி மகிர்ந்தான் (உரிச்சொல் நீக்கி எழுதுக)

10) கடைக்குப் போனேன் (இடைச்சொல்லை எடுத்து எழுதுக)

11) மலை கண்டேன் (தகுந்த இடைச்சொல் சேர்த்து எழுதுக)

## சான்று தருக.

1) ஓரெழுத்துச்சொல்

2) ஈரெழுத்துச்சொல்

3) மூவெழுத்துச்சொல்

4) பெயர்ச்சொல்

5) வினைச்சொல்

6) இடைச்சொல்

7) உரிச்சொல்

## பொருத்தமான இலக்கணக் குறிப்பினைத் தேர்ந்தெடு.

1) மாநகர்
அ) பெயர்ச்சொல் ஆ) உரிச்சொல் இ) வினைச்சொல்

2) மாதவன்
அ) பெயர்ச்சொல் ஆ) உரிச்சொல் இ) வினைச்சொல்

3) காளை
அ) நான்கெழுத்துச்சொல் ஆ) ஈரெழுத்துச்சொல் இ) மூவெழுத்துச்சொல்

4) வேந்தன்
அ) பெயர்ச்சொல் ஆ) உரிச்சொல் இ) வினைச்சொல்

5) ஓடினாள்
அ) பெயர்ச்சொல் ஆ) உரிச்சொல் இ) வினைச்சொல்

6) ஔவை
அ) நான்கெழுத்துச்சொல் ஆ) ஈரெழுத்துச்சொல் இ) மூவெழுத்துச்சொல்

7) மணிமேகலை
அ) பெயர்ச்சொல் ஆ) இடைச்சொல் இ) வினைச்சொல்

8) பூ
அ) ஓரெழுத்துச்சொல் ஆ) ஈரெழுத்துச்சொல் இ) மூவெழுத்துச்சொல்

## தொகைச் சொற்கள்

1. இருதிணை

2. இருவினை

3. முக்கனி
4. முத்தமிழ்
5. முந்நீர்
6. முப்படை
7. நால்வகை உணவு
8. நாற்குணம்
9. நாற்படை
10. நானிலம்
11. ஐம்பொறி
12. ஐம்பூதம்
13. ஐவகை நிலங்கள்
14. அறு சுவை
15. ஏழு வண்ணம்
16. எண்சுவை
17. நவதானியம்

## சொற்பிழை

வேறுபாடு அறிக.

| | |
|---|---|
| தால் - நாக்கு | வழி - பாதை |
| தாள் - பாதம் | வளி - காற்று |
| அரம் - கருவி | அண்ணம் - மெல்வாய் |
| அறம் - தருமம் | அன்னம் - பறவை |

பிற மொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் எழுதுக

1. புறக்கணிப்பு
2. மனக்குறை
3. இஷ்டம்
4. கஜானா
5. அபிஷேகம்
6. அலட்சியம்

# வடிவங்கள்

பொருத்தமான வடிவத்தின் பெயரை எடுத்து எழுதுக



1 அறுகோணம்
2. ஐங்கோணம்

--------------------------------

3. முக்கோணம்

4. எழுகோணம்

முறைமாறி அமைந்த சொற்றொடர்களை ஒழுங்குப்படுத்திப் பத்தியாக்குக.

1. வணிகன் நம்முடைய எண்ணத்தைப் புரிந்து கொண்டு, உப்பு மூட்டைக்குப் பதிலாகப் பஞ்சு மூட்டையை வைத்து விட்டான் போலும், தீமை செய்ய நினைத்த எனக்கு நன்றாகப் புரிய வைத்து விட்டான் என்று வருந்தியது கழுதை.
2. வேண்டுமென்றெ ஒவ்வொரு நாளும் தவறிவிழுவது போல் நீரில் விழுந்தது கழுதை.
3. வழக்கம்போல நீரில் தவறி விழுவது போல் விழுந்து எழுந்த கழுதையின் பாரம் இரண்டு மடங்காக உயர்ந்ததைக் கண்டு அதிர்ந்தது கழுதை.
4. நாள்தோறும் அதிக எடையுள்ள உப்பு மூட்டையைச் சுமந்து செல்வது கழுதைக்குப் பிடிக்கவில்லை.
5. படிப்படியாக வருமானம் குறைந்து வருவதை அறிந்த வணிகன் கழுதைக்குப் பாடம் புகட்ட விரும்பினான்.
6. ஓர்ஊரில் உப்பு வணிகன் இருந்தான். அவன் நாள்தோறும் உப்பு மூட்டைகளைத் தன்கழுதையின் மேலேற்றி ஆற்றைக் கடந்து சென்று விற்று வருவான்.
7. ஒருநாள் கழுதை எதிர்பாராமல் ஆற்றினுள் தவறி விழுந்தது. எழுந்தபோது தன்மீதுள்ள உப்பு மூட்டையின் எடை குறைந்துள்ளதை அறிந்து கொண்டது.

## நீதிநெறி விளக்கம் ( உரைநடை)

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. 'நவை'என்னும் சொல்லின் பொருள்

   அ) அச்சம் ஆ) மகிழ்ச்சி

   இ) வருத்தம் ஈ) குற்றம்

2. 'அவையஞ்சி' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   அ) அவைய + அஞ்சி ஆ) அவை + அஞ்சி

   இ) அவை + யஞ்சி ஈ) அவ் + அஞ்சி

3. 'இன்னலம்' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) இன் + னலம் ஆ) இன் + நலம்

இ) இனிமை + நலம் ஈ) இனிய + நலம்

4. 'கல்லார்' - இச்சொல்லின் எதிர்ச்சொல்

அ) படிக்காதவர் ஆ) கற்றார்

இ) அருளில்லாதவர் ஈ) அன்பில்லாதவர்

## விடையளிக்க

1. கல்வி கற்றவரின் இயல்பு எவ்வாறு இருக்க வேண்டும்?
2. பொருளற்ற சொற்களை அவையினர்முன் பேசுபவர் யார்?
3. பூத்தலின் பூவாமை நன்று என்று நீதிநெறி விளக்கம் எவற்றைக் குறிப்பிடுகிறது?

முதல் எழுத்து ஒன்றிவரும் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.

**கூடுதல் வினாக்கள்**

**நிரப்புக:**

1. 'மெய்' என்பதன் பொருள்---------------------------------------------------------------------
2. 'நல்கூர்ந்தார்' என்ற சொல்லின் பொருள் -----------------------------------------
3. நீதிநெறிகளை விளக்குவதால் ------------------------------------ எனப்படுகிறது.
4. நீதிநெறி விளக்கத்தை இயற்றியவர்---------------------------------------------------

திருக்குறள் கதைகள்

**சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?**

1. **'பொறை' என்பதன் பொருள்**

அ) முழுமை ஆ) வளமை இ) பொறுமை ஈ) பெருமை

2. **நிறையுடைமை - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது**

அ) நிறை + யுடைமை ஆ) நிறை + உடைமை

இ) நிறைய + உடைமை ஈ) நிறையும் + உடைமை

3. **'மெய் + பொருள்' - இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது**

அ) மெய்பொருள் ஆ) மெய்யானபொருள்

இ) மெய்ப்பொருள் ஈ) மெய்யாய்ப்பொருள்

4. **வெகுளாமை - இச்சொல்லின் பொருள்**

அ) அன்பு இல்லாமை ஆ) பொறாமை கொள்ளாமை

இ) சினம் கொள்ளாமை ஈ) பொறுமை இல்லாமை

5. **போற்றி ஒழுகப்படும் பண்பு**

அ) சினம் ஆ) பொறையுடைமை

இ) அடக்கமில்லாமை ஈ) அறிவில்லாமை

**விடையளிக்க**

1. **பொறையுடைமை எப்போது போற்றப்படும்?**
2. **மெய்ப்பொருள் காண்பதே அறிவு என வள்ளுவர் கூறக் காரணம் என்ன?**
3. **நாவைக் காக்காவிடில் ஏற்படும் துன்பம் என்ன?**
4. **சினம் எப்போது ஒருவரை அழிக்கும்?**

## பொருத்துக

1. பொறை – சொல் குற்றம்
2. மெய்ப்பொருள் – துன்பப்படுவர்
3. காவாக்கால் – பொறுமை
4. சோகாப்பர் – காக்காவிட்டால்
5. சொல்லிழுக்கு – உண்மைப்பொருள்

**பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்துத் தொடரை நிரப்புக.**

1. **ஆய்வகம் ……………………….. இருந்தது.** (மேல் தளத்தில்/ மேல் தலத்தில்)
2. **வழியில் …………………. ஒன்று வந்தது.** (குருக்குப்பாதை/ குறுக்குப்பாதை)
3. **உனக்குக் காரணம் …………………….** (புறியவில்லையா/ புரியவில்லையா)
4. **எடிசன் மின் ……………………………….. உருவாக்கினார்.** (விளக்கு/ விலக்கு)
5. **குற்றம் ……………………………………….. யாரிடம் இல்லை** (குரை/ குறை)

**பொருத்தமான வினாச் சொல்லை எடுத்து வினாத் தொடரை முழுமையாக்குக.**

**(என்ன. எது. எப்படி . யார். எங்கு. யாது. யாவை. யாருடைய )**

1. உன்னுடைய ஊரின் பெயர்------------------------ ?
2. உனக்குப் பிடித்த வண்ணம்------------------------ ?
3. நீ பள்ளிக்கு ------------ வருகிறாய்?
4. உன்னுடைய நண்பன்------------------- ?
5. கோடை விடுமுறைக்கு --------------------------------------- சென்றாய்?
6. மெய்ப்பொருள் என்பதன் பொருள் -------------------?
7. குறில் எழுத்துகள் ------------------------?
8. சாருமதி ----------------------- வீட்டிற்குச் சென்றாள்?

நிரப்புக

1. திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு ------------------------
2. திருக்குறள்--------------எழுத்தில் தொடங்கி ------------ எழுத்தில் முடிகிறது.
3. திருக்குறளில் இடம்பெறும் இருமலர்கள் -------------------------------------------

<u>மாசில்லாத உலகைப் படைப்போம்</u>

## சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. 'மாசு' - என்னும் பொருள் தராத சொல்
   - அ) தூய்மை ஆ) தூய்மையின்மை
   - இ) அழுக்கு ஈ) கசடு
2. 'மாசு + இல்லாத - இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது
   - அ) மாசிலாத ஆ) மாசில்லாத
   - இ) மாசி இல்லாத ஈ) மாசு இல்லாத
3. ''அவ்வுருவம்' என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது
   - அ) அவ் + வுருவம் ஆ) அந்த + உருவம்
   - இ) அ + உருவம் ஈ) அவ் + உருவம்
4. 'நெடிதுயர்ந்து' என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது
   - அ) நெடிது + உயர்ந்து ஆ) நெடி + துயர்ந்து
   - இ) நெடிது + துயர்ந்து ஈ) நெடிது + யர்ந்து
5. 'குறையாத' என்ற சொல்லின் எதிர்ச்சொல் –
   - அ) நிறையாத ஆ) குறைபாடுடைய
   - இ) குற்றமுடைய ஈ) முடிக்கப்படாத

## விடையளிக்க

1. ஆசிரியர் வைத்திருந்த அழைப்பிதழில் என்ன செய்தி இருந்தது?
2. அறிவியல் விழாவில் கலந்துகொள்வதற்காக மாணவர்களை ஆசிரியர் எவ்வாறு ஊக்கப்படுத்தினார்?
3. அறிவியல் விழாவில் காணப்பட்ட நெடிதுயர்ந்த உருவத்தை எப்படி உருவாக்கினர்?
4. சுற்றுச்சூழல் சீர்கேட்டுக்கு எவையெல்லாம் காரணமாக அமைகின்றன?
5. நாம் பயன்படுத்திய மின்பொருள்களை என்ன செய்யவேண்டும்?

ஒரு சொல்லுக்கு இருபொருள் எழுதுக.

1. அணி
2. ஆடு
3. நாடு

4. படி
5. ஓடு
6. மெய்

தொடர் இரண்டு; விடை ஒன்று கண்டுபிடிப்போமா?

1. காலைக்குப் பின்னால் வரும்; கழுத்தில் வந்து விழும்
2. ஆடையுமாகும்; அறிவையும் தரும்.

எழுதுதல்

1.பிறந்த நாள் விழாவிற்கு அழைப்பு விடுத்து நண்பனுக்குக் கடிதம் எழுதுக.
2.சிறுசேமிப்பு - கட்டுரை.

மனப்பாட பகுதிகள் --திருக்குறள், நீதிநெறிவிளக்கம் பாடல்

---

